# ஆகஸ்ட் - 29 - செவ்வாய்
## புனித திருமுழுக்கு யோவானின் பாடுகள்

**உமது ஆற்றலை விட்டு நான் எங்கே செல்லக்கூடும், உமது திருமுன்னை விட்டு நான் எங்கே தப்பியோட முடியும்? (தி.பா. 139 : 7)**

### முதல் வாசகம் : 1 தெசலோனி 2 : 1 – 8

சகோதர சகோதரிகளே! நாங்கள் உங்களிடம் வந்த நோக்கம் வீணாகவில்லை என்பது உங்களுக்கே தெரியும்.உங்களிடம் வருமுன்பே பிலிப்பி நகரில் நாங்கள் துன்புற்றோம். இழிவாக நடத்தப்பட்டோம் என்பது உங்களுக்குத் தெரியும். இருப்பினும் பெரும் எதிர்ப்புக்கிடையில் கடவுளுடைய நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்க நம் கடவுளிடமிருந்து துணிவு பெற்றோம்.எங்கள் அறிவுரைகள் தவற்றையோ, கெட்ட எண்ணத்தையோ, வஞ்சகத்தையோ அடிப்படையாகக் கொண்டவையல்ல. நாங்கள் தகுதி உடையவர்களெனக் கருதி, நற்செய்தியைக் கடவுளே எங்களிடம் ஒப்படைத்தார். அதற்கேற்ப, நாங்கள் பேசுகிறோம். மனிதர்களுக்கு அல்ல, எங்கள் இதயங்களைச் சோதித்தறியும் கடவுளுக்கே உகந்தவர்களாயிருக்கப் பார்க்கிறோம். நாங்கள் என்றும் போலியாக உங்களைப் புகழ்ந்ததேயில்லை. இது உங்களுக்குத் தெரிந்ததே. போதனை என்னும் போர்வையில் நாங்கள் பொருள் பறிக்கப் பார்க்கவில்லை. இதற்குக் கடவுளே சாட்சி.கிறிஸ்துவின் திருத்தூதர்கள் என்னும் முறையில் நாங்கள் உங்களிடம் மிகுதியாக எதிர்பார்த்திருக்க முடியும். ஆனால் மனிதர் தரும் பெருமையை உங்களிடமிருந்தோ, மற்றவர்களிடமிருந்தோ நாங்கள் தேடவில்லை.மாறாக, நாங்கள் உங்களிடையே இருந்தபொழுது, தாய் தன் குழந்தைகளைப் பேணி வளர்ப்பதுபோல், கனிவுடன் நடந்து கொண்டோம்.இவ்வாறு உங்கள் மீது ஏக்கமுள்ளவர்களாய், கடவுளுடைய நற்செய்தியை மட்டுமன்றி, எங்களையே உங்களுக்குக் கொடுத்துவிட ஆவலாய் இருந்தோம் ஏனெனில் நீங்கள் எங்கள் அன்புக்குரியவர்கள் ஆகிவிட்டீர்கள்.

**பதில்பாடல்:** ஆண்டவரே நீர் என்னை ஆய்ந்து அறிந்திருக்கிறீர்

### நற்செய்தி : மாற்கு6 : 17 – 29

அக்காலத்தில், ஏரோது, தன் சகோதரனான பிலிப்பின் மனைவி ஏரோதியாவை மனைவியாக்கிக் கொண்டிருந்தான் அவள் பொருட்டு ஆளனுப்பி யோவானைப் பிடித்துக் கட்டிச் சிறையில் அடைத்திருந்தான்.ஏனெனில் யோவான் ஏரோதிடம், "உம் சகோதரர் மனைவியை நீர் வைத்திருப்பது முறை அல்ல" எனச் சொல்லிவந்தார்.அப்போது ஏரோதியா அவர்மீது காழ்ப்புணர்வு கொண்டு, அவரைக் கொலை செய்ய விரும்பினாள் ஆனால் அவளால் இயலவில்லை.ஏனெனில் யோவான் நேர்மையும் தூய்மையும் உள்ளவர் என்பதை ஏரோது அறிந்து அஞ்சி அவருக்குப் பாதுகாப்பு அளித்து வந்தான். அவர் சொல்லைக் கேட்டு மிகக் குழப்பமுற்ற போதிலும், அவருக்கு மனமுவந்து செவிசாய்த்தான்.ஒரு நாள் ஏரோதியாவுக்கு நல்ல வாய்ப்பு ஒன்று கிடைத்தது. ஏரோது தன் பிறந்த நாளில் அரசவையினருக்கும், ஆயிரத்தவர் தலைவர்களுக்கும் கலிலேய முதன்மைக் குடிமக்களுக்கும் ஒரு விருந்து படைத்தான்.அப்போது ஏரோதியாவின் மகள் உள்ளே வந்து நடனமாடி ஏரோதையும் விருந்தினரையும் அகமகிழச் செய்தாள். அரசன் அச்சிறுமியிடம், "உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள், தருகிறேன்" என்றான்."நீ என்னிடம் எது கேட்டாலும், ஏன் என் அரசில் பாதியையே கேட்டாலும் உனக்குத் தருகிறேன்" என்றும் ஆணையிட்டுக் கூறினான்.அவள் வெளியே சென்று, "நான் என்ன கேட்கலாம் ?" என்று தன்தாயை வினவினாள். அவள், "திருமுழுக்கு யோவானின் தலையைக் கேள்" என்றாள்.உடனே சிறுமி அரசனிடம் விரைந்து வந்து, "திருமுழுக்கு யோவானின் தலையை ஒரு தட்டில் வைத்து இப்போதே எனக்குக் கொடும்" என்று கேட்டாள்.இதைக் கேட்ட அரசன் மிக வருந்தினான். ஆனாலும் விருந்தினர்முன் தான் ஆணையிட்டதால் அவளுக்கு அதை மறுக்க விரும்பவில்லை.உடனே அரசன் ஒரு காவலனை அனுப்பி யோவானுடைய தலையைக் கொண்டுவருமாறு பணித்தான். அவன் சென்று சிறையில் அவருடைய தலையை வெட்டி,அதை ஒரு தட்டில் கொண்டுவந்து அச்சிறுமியிடம் கொடுக்க, அவளும் அதைத் தன் தாயிடம் கொடுத்தாள்.இதைக் கேள்வியுற்ற யோவானுடைய சீடர்கள் வந்து அவருடைய உடலை எடுத்துச் சென்று ஒரு கல்லறையில் வைத்தார்கள்.

**தியானம் :** திருமுழுக்கு யோவான் கொல்லப்பட்ட நாளை இன்று திருச்சபை நினைவுகூருகின்றது. பாலை நிலத்தில் வாழ்ந்தவர், மனந்திரும்புமாறு போதித்தவர், மனந்திரும்பியவர்களின் பாவம் போக்க திருமுழுக்குக் கொடுத்தவர், தீமைக்கு எதிராக போர்க்குரல் எழுப்பியவர் திருமுழுக்கு யோவான். இன்றைய நாளுக்கான இறைவார்த்தைப் பகுதிகள் எம்மை இறையாற்றலின் துணையோடு நீதிக்கும், உண்மைக்கும் சான்று பகிர எமக்கு அழைப்பு விடுக்கின்றது. நற்செய்தியில் திருமுழுக்கு யோவான் இறையாற்றலுக்கு செயல்வடிவம் கொடுப்பதை நாம் பார்க்கின்றோம். இறையாற்றல் உண்மையானது, நீதியுள்ளது. அநீதி எவ்வடிவத்தில் செயல்பட்டாலும் அதற்கு எதிராக குரல் கொடுக்கின்றது. அநீதியை எதிர்க்கும் பொழுது பல தடைகள், இடையூகள் வருவது நிற்சயம். ஆனால் அத்தகைய தடைகள் இறையாற்றலுக்கு தடைபோட முடியாது. நாம் வாழுகின்ற சமுகத்திலும் அநீதிகள், அக்கிரமங்கள் மலிந்து கிடக்கின்றது. கடவுளை மறந்து அநீதிகளுக்கு துணைபோகும் மனிதர்கள் ஏராளம். எனவே திருமுழுக்கின் வழியாக கடவுளோடு இணைக்கப்பட்டுள்ள நாமும் யோவானைப்போல மன உறுதியோடு அநீதிகளை எதிர்த்து நிற்போம். இறையாற்றலின் துணையோடு நீதிக்கும் உண்மைக்கும் சான்றுபகிர்வோம்.